LIBRARY
23 JUN 1962
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, the 9th December 1961.

The House met in the Assembly Chamber, **Fort St. George,** at half past eight of the clock, the Deputy Speaker, (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Prime Minister's tour (expenditure)

* 2203 *Q.*—SRI K. ANBAZHAGAN : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்தியாவின் தலைமை அமைச்சர் அவர்கள் 1961 அக்டோபரில் நடத்திய தமிழ்நாடு சுற்றுப் பயணத்திற்காக அரசாங்கம் செலவிட்ட தொகை எவ்வளவு ?

(இ) அவ்வமயம் சுற்றுப் பயணத்தில் கலந்துகொண்ட தமிழ் நாடு அமைச்சர்கள் பெறும் படிச்செலவு எவ்வளவு ?

(உ) தலைமை அமைச்சர் நேருவின் சுற்றுப்பயண நாட்களில் கடமையாற்றிய காவல் துறையினரின் படிச்செலவுக்கு ஆகும் தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) to (*e*).—Orders sanctioning the expenditure were issued from different departments. Information, about the total figure, is therefore not readily available.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இதிலே போலீசாருடைய செலவைப் பெற வேண்டுமானால், அதிக காலதாமதமாகலாம். ஆனால், பிரதம மந்திரி அவர்களோடு சுற்றுப்பயணம் செய்த இதர அமைச்சர்கள், இன்னும் மத்திய சர்க்கார் சிப்பந்திகள் ஆகியோருடைய செலவுத் தொகையை உடனடியாகப் பெற்று, அதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஸ்டேட் மினிஸ்டர்களுக்கு செலவு ஆயிற்று என்று சொல்ல முடியாது. அவர்கள் ஸ்பெஷல் டிரெயினில் ஏறிக் கொண்டு வந்து விட்டார்கள் அதனாலே, அதிக செலவு இருக்காது.

[9th December 1961

SRI A. GOVINDASAMY : பல இலாக்காக்கள் செலவு செய்த தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போலீஸ் இலாகாவுக்கு மட்டும் இதனாலே எவ்வளவு தொகை செலவாயிற்று என்று அறிவிக் கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : விவரங்கள் இதுவரை யும் வந்து சேரவில்லை. அதனாலே தான் கொடுக்க முடியவில்லை.

SRI A. A. RASHEED : Sir, is it not a fact that police protection was given to the Prime Minister because of the past experience arising from the activities of the political parties in the State?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. We are guided by the past experience also. But I am glad to mention that during recent years there has been a completely calm and peaceful atmosphere and I congratulate all the political parties on that.

SRI K. VINAYAKAM : Sir, however much the cost may be, is it not a fact that it is more than compensated by the advantage which we derived by the Prime Minister's tour in South India?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is a matter of opinion. The hon. Member, Sri K. Anbazhagan, may think otherwise. what the hon. Member may consider an advantage, he may consider it a disadvantage.

SRI A. GOVINDASAMY : அமைதியான நிலைமை ஏற்படு கின்ற நேரத்திலேகூட போலீஸ்காரர்கள் ஏன் கதர் உடையிலே சி.ஐ.டி.-க்களாக உலவ வேண்டும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தக் காரணத்தினாலே தான் அமைதி இருக்கிறதோ, என்னமோ.

Small-scale Industries (North Arcot district)

* 2204 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் சிறு கைத்தொழில்கள் ஆரம்பிக்க சர்வே செய்தது எந்த நிலையில் உள்ளது ?

(இ) என்னென்ன தொழில்கள் எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) The Area Survey of the North Arcot District undertaken by the Economic Investigation Team of the Small Industries Service Institute, Madras has been completed and examined by the Government.

(இ) This Government have taken action to start a number of industries in the North Arcot district even before the survey was made. The particulars regarding the industries scheme implemented by the Government in the North Arcot District with places

of their location are given in the supplement to the Review on Industrial Development in Madras State (1960-61) which was placed on the Table of the House in March 1961. Based on the recommendations in the Area Survey Report, no separate schemes have so far been taken up by Industries Department for implementation. Necessary assistance will be given to private entrepreneurs by way of State aid or by providing factory space in the Industrial Estate to be started at Katpadi and Arkonam.

SRI S. M. ANNAMALAI : ஸார், அமைச்சர் அவர்கள் கூறு கின்றதிலே இருந்து பார்த்தால், இதற்கு முன்னுல்கூட வட ஆர்காடு ஜில்லாவில் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டதிலே மிகவும் பிற் போக்கான நிலையிலே இருந்திருக்கிறது என்று தெரிகிறது. இதே மாதிரி அறிக்கையிலேயும் கூறப்பட்டிருக்கிறது. அதனுல், உட னடியாக வட ஆற்காடு மாவட்டத்தில் சில தொழில்களை ஆரம்பிப் பதற்கு சர்க்கார் கவனம் செலுத்துவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்னென்ன தொழில்கள் எங்கெங்கே அமைக்கப்பட வேண்டுமோ, அம்மாதிரி தொழில்களை ஆங்காங்கு சர்க்கார் ஆரம்பித்துக் கொண்டுதான் வருகிறது. இதிலே தனிப்பட்ட தொழில் அதிபர்களும் முன்வர வேண்டும். மற்ற ஜில்லாக்களில் தனிப்பட்ட தொழில் அதிபர்கள் தொழில்களை ஆரம்பிப்பதற்கு முன் வருகிறுர்கள். அதனுலே அங்கே தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இந்த சிறு கைத் தொழில்கள் ரிப்போர்டிலே சிபார்சு செய்திருக்கிறபடி,

(1) Sandalwood Oil Factory, (2) Animal Shoe Nails, (3) Radio components, (4) Bicycle parts and accessories, (5) Link clips, (6) Printing roller composition, (7) Paper manufacture, (8) Crown cork, (9) Industrial alcohol, (10) Leather Boards, (11) Wattle bark factory.

இதிலே சில இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் ஏற்பட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்றத் தொழில்களை நடத்த தனியார் தனிப்பட்ட முறையில் வரலாம், 10 பேர்களாக சேர்ந்து வரலாம் அல்லது கூட்டுறவு சங்கம் அமைத்துக்கொண்டும் வரலாம் இதிலே அங்கத்தினர்களும் அக்கறைகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI A. A. RASHEED : Sir, may I know whether any entrepreneurs have come forward to take advantage of these things?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Few entrepreneurs have come and established some units in the Industrial Estate, Guindy.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு நடத்தக்கூடிய தொழில்கள் ஏற்படவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தத் தொழில்களுக்கு முதலாளிகள் முன்வந்தால் தொழிலை

[9th December 1961

ஆரம்பிப்பதற்கு மாநில சர்க்கார் அளவிலேயே உத்தரவு கிடைக்குமா அல்லது மத்திய சர்க்காரிடத்தில் ஏதாவது அனுமதி பெற வேண்டுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு மத்திய சர்க்காரைப் பற்றிய கவலை இதிலே வேண்டாம்.

SRI A. GOVINDASAMY : இந்த மாவட்டத்திலே சந்தன எண்ணெ உற்பத்திக்கு முயற்சி எடுத்துக் கொண்டதைப்போல், ஜவ்வாது மலையிலே கிடைக்கக்கூடிய சந்தன கட்டைகளை உபயோகித்து சந்தன சோப் செய்வதற்கு முயற்சி எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கு கனம் அங்கத்தினர் அவர்கள் யாராவது 4 பேரை அழைத்து, அந்தத் தொழிலை நடத்துவதற்கு முன்வந்தால், அவர்களுக்கு வேண்டிய உதவியை இந்த அரசாங்கம் செய்யும்.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வட ஆற்காடு ஜில்லாவிலே ஏற்கனவே சந்தன எண்ணெ உற்பத்தி ஆலை தனி நபர்களால் நடத்தப்பட்டு, அது இப்போது மூடப்பட்டிருக்கிறது. இந்த சந்தன மரத்தை பாதுகாக்கக்கூடிய பொறுப்பு சர்க்காரிடத்திலே இருக்கிறது. அது ரொம்ப பொருத்தமானது. ஆகவே, இந்த மூடப்பட்ட சந்தன எண்ணெ தொழிற்சாலையை சர்க்கார் எடுத்து நடத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காரைப் பொறுத்த மட்டில் சந்தன எண்ணெயை விட, சந்தனக் கட்டைகளை ஏலத்தில் விற்பதே மிகவும் லாபகரமாக இருக்கிறது. அதனால் தனி நபர்கள் இதற்கு முன்வந்தால், அதற்கு வேண்டிய உதவி செய்யப்படும்.

SRI S. M. ANNAMALAI : சந்தன எண்ணெ தொழிற்சாலையை நடத்துவதைவிட, சந்தன மரத்தை விற்பதால் அதிகமான லாபம் கிடைக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அறிக்கையில் கண்டிருப்பதை பார்த்தால், இந்த தனி நபர்களால் நடத்தப்பட்ட தொழிற்சாலை கூட்டாளிகளுக்குள் ஏற்பட்ட தகராறுல் மூடப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. ஆகவே, இதை சர்க்கார் எடுத்துக்கொண்டு, ஒருசில ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதை கருத்தில் கொண்டு இவர்கள் ஏற்று நடத்த முக்கியமாக இதிலே கவனம் செலுத்துவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதை சர்க்கார் பரிசீலனை செய்திருக்கிறது. அறிக்கையிலே உள்ளதை யெல்லாம் சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதில்லை. பரிசீலனை செய்தே எதையும் முடிவெடுக்க வேண்டும். அப்படி செய்ததிலே,

9th December 1961]

வேண்டாமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் சொல்கிறேன். தனி நபர்கள் யாராவது முன்வந்தால், வேண்டிய உதவி செய்யப்படும்.

SRI A. GOVINDASAMY : சந்தன சோப் உற்பத்தி ஆலை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா என்று நான் கேள்வி கேட்ட நேரத்தில் யாரையாவது நாலு பேரை அழைத்துக் கொண்டு வாருங்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அப்படியானால் சர்க்காருக்கு அத்தகைய எண்ணம் கிடையாதா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்கார்தான் எதையும் செய்ய வேண்டுமென்பதில்லை. கனம் அங்கத்தினர்களுக்கும் இதிலே அக்கறை இருக்க வேண்டும். அதிலும் குறை கூறக்கூடிய அங்கத்தினர்களுக்கு இதிலே முக்கியமான பொறுப்பு இருக்க வேண்டுமென்பதற்காக, அவர்களும் இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காக நான் சொன்னேன்.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், கேரள சாண்டல் உட் சோப் என்றும், மைசூர் சாண்டல் உட் சோப் என்றும் கேரளாவிலிருந்தும், மைசூரிலிருந்தும் தயாரிக்கப்படுகிறது. அதேபோல், நம் சர்க்காரும் தமிழ்நாடு சாண்டல் உட் சோப் என்று ஒரு தொழிற்சாலையை ஏற்று நடத்துவதற்கு முயற்சி செய்யக் கூடாதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எத்தனையோ புதிய அமைப்புகள் இப்போது இருந்து வருகின்றன. இந்த சோப் தொழிற்சாலை என்பது ஒரு பழமையான தொழில். ஆகவே, இதை யார் வேண்டுமானாலும் ஏற்று நடத்தலாம். சர்க்கார்தான் ஏற்று நடத்த வேண்டுமென்பதில்லை. சர்க்கார் ஏற்று நடத்த வேண்டியதை, நடத்திக்கொண்டு வருகிறது.

Food gift by the United States of America

* 2205 *Q.*—SRI M. KALYANASUNDARAM : } Will the Hon.
SRI A. A. RASHEED : }
the Minister for Finance be pleased to state—

(*a*) the details of food gift offered by the United States of America for school children in Madras State; and

(*b*) when the supply is expected to commence ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The CARE organisation has offered to supply 18.75 million pounds of rice, 6.25 million pounds of milk powder, 3 million pounds of corn meal and 3 million pounds of vegetable cooking oil, worth about Rs. 3 crores.

(*b*) A shipment of 4·3 million pounds of milk powder has arrived in August 1961. The other commodities are expected to arrive during this and subsequent months.

[19th December 1961

SRI A. GOVINDASAMY : குழந்தைகளுக்கென நன்கொடையாக வந்த பால் துர்விநியோகம் செய்யப்பட்டு, அந்த முறையிலே யாராவது கண்டுபிடிக்கப்பட்டு, அத்தகைய தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுவரைக்கும் நல்ல வேளையாக யாராலும் அத்தகைய தவறுகள் ஏற்படவில்லை.

SRI A. A. RASHEED : Sir, may I know whether it is a gift from the people of the United States or from the Government of the United States? Are any cash grants received from the Government of the United States?

THE HON SRI C. SUBRAMANIAM : No cash grant is received. This aid is routed through CARE Organisation of America.

SRI K. VINAYAKAM : In the event of the success of the scheme, would our Government take steps to extend this for the next year also?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is bound to be extended not only for the next year but for many more years.

Adulteration of oil

*** 2206 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN :** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவு கலப்படத்தடுப்புச் சட்டத்தின்படி எண்ணெயில் எத்தனை சத விகிதம் கொழுப்புச் சத்து அமிலமிருந்தால் தண்டிக்கப்படுகிறது ;

(இ) 1959-60-ல் நமது ராஜ்யத்தில் எத்தனை எண்ணெய் வியாபாரிகளுக்கு அபராதம் அல்லது தண்டனை விதிக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : () Free fatty acid in edible oils should not be more than 3 per cent.

(இ) A statement [a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த ஸ்டேட்மெண்டில் 305 பேர்களில் 184 பேர்களுக்குத் தான் தண்டனை கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. தண்டனை என்று சொன்னால், அபராதம் விதிக்கப்பட்டதா அல்லது கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டதா ? எந்தமாதிரி தண்டனை விதிக்கப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தண்டனையில் அபராதமும் உண்டு, சிறை தண்டனையும் உண்டு. ஆனால், இப்பொழுது என்னிடம் அது பற்றி விவரம் இல்லை, 'ப்ரேக்-அப்' இல்லை.

[a] Printed as Appendix I on page 290 infra.

9th December 1961]

Closure of a Hotel (Tiruchirappalli town)

* 2207 *Q.*—SRI A. A. RASHEED (on behalf of SRI P. S. K. LAKSHMIPATHY RAJ): கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி பெரிய கடை வீதியிலிருக்கும் ஸ்ரீ. கிருஷ்ணபவான் ஹோட்டல் மூடியது சம்பந்தமாக சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Tiruchi District Hotel Workers' Union, Tiruchirappalli raised an Industrial dispute over the closure of the hotel. The Labour Officer, Tiruchirappalli held conciliation and submitted his report to Government. After considering his report, the Government have passed orders declining adjudication.

SRI A. A. RASHEED: Is it a fact that this hotel was closed because the size and quality of the food prepared there were not up to the standard?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not know the reasons for the closure of the hotel. But, I know this much. The hotel was definitely closed. The management of the hotel said that they could no longer run it.

Ambar Charkas

* 2208 *Q.*—SRI A. R. MARIMUTHU: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இதுவரை நம் ராஜ்யத்தில் எத்தனை அம்பர் ராட்டைகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன ?

(இ) அவைகளில் எத்தனை வேலை செய்யவில்லை ?

(உ) 1960-61-ல் எவ்வளவு நூல் உற்பத்தி செய்யப்பட்டது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) 25,170 up to 28th February 1961.

(இ) 12,828.

(உ) 11,541.

Dysentery cases (North Arcot)

DEPUTY SPEAKER: கேள்வி 2209.

SRI S. M. ANNAMALAI: இது முக்கியமான கேள்வியாக இருப்பதினாலே அரை மணி நேர விவாதம் வேண்டுமென்று கோருகிறேன்.

[9th December 1961

DEPUTY SPEAKER : இன்னும் கேள்வி கேட்கப்பட்டு, பதில் அளிக்கப்படவில்லையே? அதற்குப் பிறகு உப கேள்விகள் கேட்ட பிறகு தானே நீங்கள் அரை மணி நேர விவாதம் வேண்டும் என்று கேட்கலாம்.

* 2209 Q.—Sri N. K. PALANISAMI :
Sri V. K. KOTHANDARAMAN :
Sri M. SELVARAJ :
Sri S. M. ANNAMALAI : } Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there have been any cases of dysentery, diarrhoea, cidima and swelling in the Virudhachalam taluk in the South Arcot district, Polur and Arani taluks in the North Arcot District;

(*b*) if so, the number of persons affected and the number of deaths caused thereby;

(*c*) whether any investigation has been conducted to find out the reasons for the outbreak of these diseases;

(*d*) if so, the details thereof; and

(*e*) the steps taken by the Government in this regard?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) to (*e*) A statement [a] is placed on the table of the House.

Sri S. M. ANNAMALAI : இது முக்கியமான கேள்வியாக இருப்பதினால், இதற்கு முன்பு இதுபற்றி கேள்வி கேட்கப்பட்டு, தகுந்த பதில் சொல்லப்படாத காரணத்தினால், அரை மணி நேர விவாதத்திற்கு அவகாசம் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : பட்ஜெட் விவாதம் வருகிறது. அந்த விவாதத்தின் போது இதைப்பற்றி பேசலாம்.

DEPUTY SPEAKER : The Budget will be presented today and the hon. Member will have an opportunity to speak on this subject during the general discussion on the Budget. Moreover, I think the Hon. Minister has replied to a similar question sometime back.

Sri K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த நோய் அங்கே தோன்றுவதற்குக் காரணம் அவர்களுக்குப் போதுமான சத்துள்ள உணவு கிடைக்காதது தான் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களுக்கு சத்துள்ள உணவு எது குறைவாக இருக்கிறதோ அந்த உணவை உடனடியாக அந்த வட்டாரத்திலுள்ள எளிய மக்களுக்கு அளிப்பதற்கு அமைச்சர் அவர்களிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

a Printed as Appendix II on 290 page infra.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

9th December 1961]

THE HON. SRI M. A. MANICKAVELU : சத்துள்ள உணவு இல்லாத காரணம் மாத்திரமல்ல. வேறு ஏதோ "டெக்னிக்கல்லாக" சொல்லுகிறார்கள். ஆனால், இப்போது அந்த நோய் புதியதாக இல்லை. பழைய கேஸ் அவ்வப்பொழுது 'ரிலாப்ஸ்" ஆகிறது. பொதுவாக மக்கள் எந்த வகையான சத்துள்ள உணவு சாப்பிட வேண்டும் என்பதுபற்றி பிரசாரம் நடக்கிறது. குறிப்பாக அரிசி சாப்பிடுகிற வகையிலே கைக்குத்தல் அரிசி சாப்பிட்டால் அநேகமாக அந்த சத்து கிடைக்கும். அதுதான் மக்கள் சாப்பிடுவதில்லை. கனம் அங்கத்தினர் பிரசாரம் செய்வதிலே இந்தப் பிரசாரத்தையும் சேர்த்துக்கொண்டால் நன்றாக இருக்கும்.

SRI K. ANBAZHAGAN : அந்த வட்டாரத்தில் உள்ள மக்கள் அரிசி கூட போதுமான அளவு சாப்பிடாமல், பிற வகையான தானியங்கள் சாப்பிடுவதினால் இந்த நோய் வருகிறது என்று தெரிவித்தார்கள். கைக்குத்தல் அரிசி சாப்பிடவேண்டுமென்று சொன்னாலும், அந்த வட்டாரத்தில் முழுவதும் இயந்திர அரிசி கிடைப்பதற்கு வாய்ப்பு இருப்பதைத் தடுத்து, கைக்குத்தல் அரிசி கடைகளில் விற்கப்படுவதற்கு அரசாங்கம் ஏதேனும் வழி செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கைக்குத்தல் அரிசியை மக்கள் விரும்புவது இல்லை. பழக்கம் மாறிவிட்டது. அது தான் தகராறு. அரிசி இல்லாமல் வேறு தானியங்களை சாப்பிட்டால் நல்லது. அம்மாதிரி சாப்பிடமாட்டேன் என்கிறார்கள் என்பது தான் என்னுடைய குறைபாடு.

SRI S. M. ANNAMALAI : இந்த நோய் உண்டாவதற்குக் காரணம் முக்கியமாக வறுமை என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா ? அப்படியானால், வறுமை காரணமாக இருப்பதை தடுப்பதற்கு என்ன நடவடிக்கையை இதுவரை சர்க்கார் மேற்கொண்டிருக்கிறார்கள் ? இப்பொழுது புதியதாக அந்த நோய் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு ஆண்டு ஆனாலும்கூட இறந்துவிடுகிறார்கள். இது குறித்து சர்க்கார் கவனிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : வறுமையின் காரணமாக பலவித விபரீதங்கள் ஏற்படுகின்றன. ஆகையினால், இதற்கு வறுமை தான் காரணம் என்று சொல்ல முடியாது. மேலும், இதற்கு சத்துள்ள உணவு சாப்பிடாதது மாத்திரம் காரணம் இல்லை. சுற்றுப்புற சுத்தம் (என்விரன்மெண்டல் ஸானிடேஷன்) இல்லாததும் காரணம். அதோடுகூட சுத்தமான தண்ணீர் சாப்பிடாததும் சேருகிறது. சத்து இல்லாத உணவோடுகூட இந்தக் காரணங்களும் சேர்ந்து நோய்க்கு அதிக பலம் கொடுக்கிறது. அதுதான் காரணம்.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் அமைச்சர் அவர்கள் கைக்குத்தல் அரிசி சாப்பிட்டால் இந்த மாதிரி வியாதி வராது என்று சொன்னார்கள். இந்த வயிற்றுக் கடுப்பு வியாதி ஏற்படக்கூடிய பகுதிகளில் இருப்பவர்கள் மாத்திரம் மெஷின் அரிசியை

சாப்பிடுகிறார்கள், மற்ற பகுதிகளில் உள்ளவர்கள் கைக்குத்தல் அரிசி சாப்பிடுகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுடைய அபிப் பிராயமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கைக்குத்தல் அரிசி சாப்பிட்டால் இந்த நோய் வராது என்று சொல்ல முடியாது. அதனால் உடலில் தடுப்பு சக்தி அதிகமாக ஏற்படும். அது மாத் திரம் காரணம் அல்ல. பல காரணங்கள் இருக்கின்றன.

SRI A. A. RASHEED : Since this disease is prevalent in the four taluks of the North Arcot District, may I know what steps the Government have taken to prevent it from spreading to other taluks and other districts?

THE HON. SRI M. A. MANICKAVELU : No special steps are required to be taken in the other taluks. This has occurred mainly in the North Arcot and South Arcot districts and that is probably due to the low standard. That is only a guess, I should say. The exact reason is still not found out.

SRI A. GOVINDASAMY : கைக்குத்தல் அரிசி சாப்பிடாததி னால் இந்த வியாதி வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். புதியதாக இப்பொழுது சோளம் சாப்பிட்டால் இந்த நோய் வராது என்று அமைச்சர் அவர்கள் பிரசாரம் செய்கிறார் கள். சோளம் சாப்பிடுவதின் காரணமாக இந்த வியாதியை தடுத்து நிறுத்த முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: சோளம் பரவாயில்லை. அரிசி சாப்பிடுகிற விதம் இப்பொழுது மாறிவிட்டது. மெஷின் அரிசி சாப்பிட்டால் 'பி' வைடமின் இல்லை. மற்றபடி வேறு தானியம் சாப்பிட்டால் ஓர் அளவுக்கு நன்றாக இருக்கும். மக்கள் அதற்கு இஷ்டப்படுவதில்லை. காலையில் எழுந்தால் டீ சாப்பிடத் தான் போகிறார்கள். அது தான் பெரிய கஷ்டமாக இருக்கிறது.

SRI S. M. ANNAMALAI : மேஜையின் மீது வைக்கப்பட் டிருக்கிற அறிக்கையில் வட ஆற்காடு ஜில்லாவில் ஆரணி, போளூர் தாலுகாக்களுக்கும், தென் ஆற்காடு ஜில்லாவில் விருத்தாசலம் தாலுகாவிற்கும் புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. வட ஆற் காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் எத்தனை பேர்கள் இறந் திருக்கிறார்கள் என்பதற்கு புள்ளிவிவரம் இருக்கிறதா ? அப்படி யானால் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : வட ஆற்காடு ஜில்லா வில் வந்தவாசி, செங்கம், போளூர், ஆரணி, திருவண்ணாமலை, செய் யார் தாலுக்காக்களிலும், தென் ஆற்காடு ஜில்லாவில் விருத்தா சலம், கள்ளக்குரிச்சி, திருக்கோயிலூர், விழுப்புரம் தாலுக்காக் களிலும் இந்த நோய் இருந்தது. வட ஆற்காடு ஜில்லாவில் 6,906 பேர்களுக்கு நோய் வந்து, அதிலே 531 பேர்கள் இறந்து விட்டார்கள். தென் ஆற்காடு ஜில்லாவில் 4,880 பேர்களுக்கு நோய் வந்தது. அதிலே 564 பேர்கள் இறந்துவிட்டார்கள்.

9th December 1961]

Five-year Plans

* 2210 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களும் எந்த அளவில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை ஆராய்வதற்கு ஒரு கமிட்டி நியமிக்கும் உத்தேசமுண்டா ?

(இ) அப்படியாயின், அதன் விவரமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) No, Sir.

(இ) Does not arise.

SRI S. M. ANNAMALAI : முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆகியவைகள் நிறைவேறியிருந்தும்கூட மாவட்ட மக்களுக்கு ரூ. 1-4-0 கூட போய்ச் சேரவில்லை. அதை ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு தனி கமிட்டி நியமித்து ஆராய்ச்சி செய்ய என் சர்க்கார் முன்வரக்கூடாது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்த அளவுக்கு முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதற்கு புள்ளிவிவரம் இருக்கிறது, கணக்கு இருக்கிறது. அதற்காக ஒரு தனிக் கமிட்டி அவசியம் இல்லை. இன்னும் தொடர்ந்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறுவதன் மூலம்தான் மக்கள் அதிகமான வளம் பெற முடியும். இதெல்லாம் கமிட்டி செய்கிற காரியம் இல்லை.

* 2211 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state the district-war details of the targets of the Second Five-Year Plan, the results achieved and the amount spent?

THE HON. SRI C. SUBRAMANIAM : District-wise details of targets, achievements and the expenditure incurred in implementing the Plan Schemes during the Second Five-Year Plan period are under compilation and will be placed on the table of the House in due course.

Veterinary College (Outbreak of Fire)

* 2212 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any fire accident occurred recently in the Veterinary College; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

(*b*) Fire broke out unexpectedly in the Madras Veterinary College at about 7-45 p.m. on 27th February 1961 in the hall situated in the extreme wing of the old experimental small animal

shed and adjoining the rooms of the Lecturer in Hygiene and Reader in Pathology. Immediately on noticing the fire the Fire Brigade was requisitioned and the fire was quelled. The damage caused to the building by the fire is estimated at Rs. 1,630. About 800 days old chicks, the value of which is estimated at Rs. 600, also perished in the fire. The total damage therefore comes to Rs. 2,230. It is considered that the fire is likely to have been caused by an outside agency.

SRI A. A. RASHEED : Is it a fact that fire extinguishers were not available there? If so, will the Government make available sufficient number of fire extinguishers to control fire whenever it breaks out?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no such information, Sir.

SRI K. VINAYAKAM : Is it not a fact that this fire broke out due to defective electric wiring system in the incubator from where small baby chickens are brought out and is it not also a fact that more than 1,000 baby chickens were destroyed on account of this fire and what is the estimated loss on account of this fire accident?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, that was verified and it was found that that was not the reason. The fire was not due to any such mishap. About the number of chicks that were killed during the fire accident, I have already stated that it was only 600.

Teacher's training school (Sathanur)

* 2213 *Q.*—SRI P. S. SANTHANAM : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா--

சாத்தனூர் அணைகட்டில் காலியாக இருக்கும் கட்டிடங்களில் ஆசிரியர் போதனாமுறை பாடசாலை ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

* 2214 *Q.*—SRI P. U. SHANMUGAM : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

போளூரில் உள்ள ஆதார ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடத்தைச் சாத்தனூர் நீர்த்தேக்கத்தின் அருகில் உள்ள கட்டிடங்களுக்கு மாற்ற உத்தேசமுண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI P. S. SANTHANAM : தலைவர் அவர்களே, ஆதாரப் பள்ளிப் பயிற்சி பள்ளிக் கூடத்தை நடத்த தனியார் துறையில் சென்ற ஆண்டு சர்க்காரை யாராவது கேட்டார்களா? அப்படியிருந்தால் அதை மறுக்கக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

9th December 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : கேட்டிருக்கும் கேள்வி சாத்தனூர் நீர் தேக்கத்தில் உள்ள கட்டடங்களில் பள்ளி வைப்பது பற்றியது. இப்பொழுது கேட்கப்படும் உப கேள்விகளுக்குப் பதில் வேண்டுமென்றால், தனிக்கேள்விதான் போடவேண்டும்.

Cashew Cultivation

*** 2215 Q.—SRI A. R. MARIMUTHU :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் ராஜ்யத்தில் எவ்வளவு விஸ்தீரணம் முந்திரி பயிராக்கப்பட்டிருக்கிறது ?

(இ) வருட உற்பத்தி எவ்வளவு? எங்கு அனுப்பப்படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) 1,30,327 acres during 1960–61.

(ஆ) 11,504.199 metric tonnes in 1960–61. Appreciable quantities are sent to Singapore, Malaya, United States of America, Hong Kong, Canada, Australia, United Kingdom and West Germany.

*** 2216 Q.—SRI M. P. SARATHI :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் முந்திரி உற்பத்தியின் அளவு என்ன ?

(இ) ஆண்டொன்றுக்கு ஆகும் ஏற்றுமதியின் அளவும் மதிப்பும் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—

(அ) 11,504,199 metric tonnes in 1960–61.

(இ) Cashew kernal, 295 tonnes, valued at Rs. 13,01,252 in the year 1959–60.

Cashewnu (raw) : 29,609 tonnes (metric) valued at Rs. 28,440 in the year 1959–60.

SRI A. A. RASHEED : ஸார், நம் ராஜ்யத்தில் முந்திரியுடன், சிந்திரியும் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைக் கேட்க வேண்டிய இடம் வேறு. (சிரிப்பு.)

DEPUTY SPEAKER : The hon. Member should not put such questions.

SRI A. GOVINDASAMY : இப்பொழுது புதிதாக புறம்போக்கு நிலங்களில் வைக்கும் முந்திரிச் செடிகள் நல்ல பலன் அளிக்கின்றனவா ? எதிர் பார்த்த அளவு பலன் இருந்தால், அந்தத் திட்டத்தை பல மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க சர்க்கார் யோசிக்குமா ?

[9th December 1961

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சாதாரணமாக நல்ல பலன் கிடைக்கிறது. ஆனால், சில இடங்களில், மண் சரியாக இல்லாவிட்டால் செடிகள் நன்றாக வளருவதில்லை. அதை உழுது விட்டு, பிற்பாடு செடிகள் வைக்க வேண்டியிருக்கிறது. அதெல்லாம் அவ்வப்பொழுது கவனிக்கப்பட்டு வருகிறது. சாதாரணமாக வேறு ஒன்றுக்கும் லாயக்கில்லாத பூமிகளில் மேலும் மேலும் விஸ்தரிக்கப்பட இருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : ஸார், முந்திரியினுடைய உற்பத்தி பெருகிவரும் சூழ்நிலையில், பக்கத்திலே முந்திரித் தொழில் அமைப்பது பற்றி அரசாங்கம் ஆராய்ந்ததா? அப்படி பல தொழில்களைத் தொடங்க ஏற்பாடுகள் இருக்கின்றனவா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுவும் கவனிக்கப்படுகிறது. ஏற்கனவே, தென் ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு முறையில் முந்திரி எண்ணெய் உற்பத்தி தொழிற்சாலை அமைக்கப்பட்டிருக்கிறது.

SRI A. GOVINDASAMY : தமிழ் நாட்டில் எந்தப் பகுதியில் முந்திரி காடுகள் நல்ல பலன் அளிக்கிறதோ, அங்குள்ள விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் முறையில் பல சலுகைகளும் கொடுத்து, இந்த டாலர் சம்பாதிக்கும் விளைபொருளை அதிகப்படுத்த சர்க்கார் முன்வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : செங்கல்பட்டு, தென்னாற்காடு, திருச்சி மாவட்டங்களில் நல்ல முறையில் பயிரிடப்பட்டு வருகிறது. இது காட்டு இலாகாவினால் செய்யப் படுகிறது, விவசாயிகள் செய்வதில்லை. அப்படிச் செய்தால் வசதிகள் அளிக்கப்படுகிறது.

SRI T. S. RAMASWAMI : May I know whether these cashewnuts are processed and sent abroad or are they sent in a raw form, and if processed where the cashew factory is situated?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is processed and sent abroad.

SRI C. NATARAJAN : தலைவர் அவர்களே, கள்ளக் குறிச்சியில் முந்திரி பயிர் செய்ய எத்தனை ஏக்கர்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை.

SRI P. S. SANTHANAM : செங்கல்பட்டு மாவட்டத்தில் வைத்து வளர்க்கும் முந்திரிச் செடிகளைவிட வட ஆற்காடு மாவட்டத்தில் சாத்தனூர் பக்கத்தில் முந்திரிக் கன்றுகள் மிக நன்றாக வளர்ச்சி அடைந்து இருப்பதால், அதை ஊக்குவிக்க மேலும் மேலும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப் படுகிறது?

9th December 1961]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எல்லா இடத்திலும் வளர்ச்சி ஒரே மாதிரி இல்லை என்று சொன்னேன்; வித்தியாசத்திற்குக் காரணமும் உண்டு. அதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது. எங்கெங்கு நல்ல முறையில் வருகிறதோ, அதற்கு வேண்டிய வசதிகள் செய்யவும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri T. T. DANIEL : May I know the nature of the aid which the Government are giving to cashew growers?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : About the aid, some loan is given for private agriculturists who propose to cultivate cashew.

Sri S. RAMALINGA PADAYACHI : திருச்சி மாவட்டத்தில், உடையார் பாளையம் பகுதியில் முந்திரி நல்ல முறையில் வளர்ச்சியடைகிறது, நல்ல பலனும் கிடைக்கிறது. அங்கு அரசாங்கம் என்ன ஊக்கம் அளிக்கிறது, எவ்வளவு உற்பத்தி அதிகம் என்று சொல்ல முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : உடையார்பாளையம் தாலுகாவில் வெற்றிகரமாகத்தான் இருக்கிறது. அங்கே "குமரி கல்டிவேஷன்" செய்து, விவசாயிகள் அங்கேயே இருந்து முந்திரிச் செடியையும் வைத்து, விவசாயமும் செய்து நல்ல பலன் அடைந்து வருகிறார்கள். கனம் அங்கத்தினர் குறிப்பிடும் தொகுதியில் நல்ல முறையிலேதான் நடைபெறுகிறது என்று நானும் சொல்கிறேன்.

Sri A. R. MARIMUTHU : இந்த முந்திரிச் செடி ஓர் ஏக்கருக்கு வருஷத்திற்கு கணிசமாக என்ன கிடைகிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கேள்வி தெரியவில்லை.

Sri T. IRUSAPPAN : தாழ்த்தப்பட்ட மக்களுக்கு புதிதாகப் பல காரியங்களுக்கும் கூட்டுறவு சங்கங்கள் வைத்து நடத்துவது போல், ராமநாயக்கன் பாளையத்தில் முந்திரி பயிரிட ஒரு கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தி இருக்கிறது. கிணறு வெட்டி, அதற்கு பவர் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, முந்திரி பயிர் செய்ய சர்க்கார் அவர்களுக்கு வசதிசெய்து கொடுப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : முந்திரி பயிர்செய்ய நிலம் தகுதியாக இருந்து, விவசாயிகள் கூட்டுறவு சங்கம் அமைத்தால், அரசாங்கம் அதற்கு வேண்டிய உதவிகள் செய்யும்.

Sri A. GOVINDASAMY : முந்திரி நடு விழாவுக்கு மந்திரிகள் போனது உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சிந்திரிதான் தெரியாது; மந்திரியும் முந்திரிக்குப் போவது உண்டு.

Bridge across Tambaraparani

* 2217 *Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the present stage of the scheme of the construction of bridges at Cheranmahadevi and Eral across the river Tambaraparani in Tirunelveli district?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : (1) *Construction of a causeway across Tambaraparani river at Sheranmahadevi.* Approval of the Government of India to the revised cost of the work amounting to Rs. 7,80,000 being met out of the allocations to the Government of Madras from the Central Road Fund has been obtained. The detailed estimate for the work is under scrutiny by the Chief Engineer (Highways and Rural Works), Madras.

(2) *Construction of a bridge across Tambaraparani river at Eral.*—The detailed estimate for the work is under preparation by the Director, Highways Research Station, Guindy.

Town Panchayat Officers (Pay)

* 2218 *Q.*—Sri V. SUBBIAH : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

டவுன் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளுக்கு 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதல் ஊதியக் குழுவின் சிபார்சுபடி ஊதிய விகிதங்கள் வழங்கப்படாததின் காரணமென்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : The Madras Pay Commission did not recommend any revision in the scales of pay for Executive Officers of Panchayats as proposals for simplification of the different grades of Executive Officers into two grades corresponding to lower and upper division clerks in Government Service were then under the consideration of Government. Orders have since been issued provincialising the services of the Executive Officers, constituting them into two grades and equating their pay with lower division and upper division clerks in Government Service.

Sri V. SUBBIAH : இந்த அதிகாரிகளுக்கு பே கமிஷன் ரிப்போர்ட்டில் கண்டுள்ளபடி சம்பள விகிதங்கள் கொடுக்காததற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : பே கமிஷன் இதைப் பற்றி எதுவும் சிபாரிசு செய்யவில்லை. எக்ஸிகூடிவ் ஆபீசர்கள் சம்பள விகிதத்தை எந்த முறையிலே அமைப்பது என்பது சர்க்கார் பரிசீலனையில் இருந்து வந்தது. இப்பொழுது பரிசீலனை பண்ணி அவர்களை இரண்டு கிரேடுகளாகப் பிரித்திருக்கிறது.

9th December 1961]

அதாவது, கிரேட் 1, கிரேட் 2 என்று. 1-வது கிரேடுக்கு அப்பர் டிவிஷன் குமாஸ்தாவுக்குச் சமமாகவும், இரண்டாவது கிரேடுக்கு லோயர் டிவிஷன் குமாஸ்தாவுக்குச் சமமாகவும் இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த குமாஸ்தாக்களுக்கு பே கமிஷன் என்ன சிபார்சு செய்திருக்கிறதோ அதே பிரகாரம் இப்பொழுது கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

SRI A. GOVINDASAMY : வேறு பல இலாக்காக்களிலுள்ள எக்ஸிகூடிவ் ஆபீசர்களுக்கு, அதாவது அதே கிரேடிலுள்ளவர்களுக்கு கணிசமான சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது இந்தப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள் மட்டும் ஏன் கவனிக்கப்படாமல் விடப்பட்டார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கவனித்துத்தான் இப்பொழுது அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கப்பட்டது. முன்னமேயே இருந்த ஸ்கேலேயும், இப்பொழுது இருக்கிற ஸ்கேலேயும் பார்த்தால் கணிசமான உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவரும்.

SRI K. VINAYAKAM : Is it not a fact that in major panchayats there are already upper division clerks? The Executive Officer is paid at the same rate as the clerks, who are working under him are paid? Is it not illogical? Will the Government reconsider the decision to raise the scale of pay to be paid to the Executive Officers of town panchayats so as to be slightly higher than the scale of pay paid to the upper division clerks who are working under them?

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member Sri K. Vinayakam is correct. There are upper division clerks in town panchayats.

SRI A. GOVINDASAMY : இந்த நிர்வாக அதிகாரிகளை அப்பர் டிவிஷன் குமாஸ்தா ஸ்கேலில் வைத்து கணிசமான உயர்வு கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில், கூட்டுறவு இலாகா, தொழில் துறை இலாகா இவைகளில் பணியாற்றிவரும் நிர்வாக அதிகாரிகளுக்கு கணிசமான சம்பள உயர்வு ஏற்பட்டிருக்கிற நேரத்திலே இந்த பஞ்சாயத்து அதிகாரிகளை மட்டும் அப்பர் டிவிஷன் குமாஸ்தா நிலையில் வைக்க காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த நிர்வாக அதிகாரிகளை யாருக்குச் சமமாகச் செய்வது என்பதுதான் முதல் பிரச்னை. அதைப் பரிசீலனை செய்தபொழுது முதல் கிரேடு எக்ஸிகூடிவ் ஆபீசர்களை, அப்பர் டிவிஷன் குமாஸ்தாவுக்குச் சமமாக வைக்கலாம் என்று கருதப்பட்டது. அவர்களுக்கு முன்னால் இருந்த சம்பள விகிதம் ரூ. 80—2½—100. இப்பொழுது 125—5—175 என்று மாற்றப்பட்டிருக்கிறது. அதே மாதிரி கிரேட் 2, கிரேட் 3-க்கு

ரூ. 50—1—65 ஆக இருந்தது இப்பொழுது 90—4—110—3—140 ஆக மாற்றப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்தால் கணிசமான உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவரும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Is there any proposal before the Government to provincialise the other categories in the panchayats?

THE HON. SRI C. SUBRAMANIAM : That will be taken up later on. With the experience gained we have to take a decision in this matter. As far as possible, it may not be desirable to provincialise every service in the panchayat union.

Higher Elementary School (Tuticorin)

*** 2219 Q.—SRI R. J. SUNDAR SINGH :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தூத்துக்குடி, இல்லத்தார் உயர்தர ஆரம்பப் பள்ளியின் நிர்வாகிகளால் 1958-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ந் தேதி, 1958-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ந் தேதி ஆகிய தேதிகளில் வேலையிலிருந்து நீக்கப்பட்ட, அப்பள்ளியின் இரண்டு ஆசிரியைகளை மீண்டும் வேலைக்கெடுத்துக்கொள்ளவேண்டி உத்தரவுகள் ஏதேனும் பிறப்பிக்கப்பட்டனவா?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

SRI R. J. SUNDAR SINGH : Sir, may I know whether these two lady teachers have been reinstated and, if not, what action has been taken against the management?

THE HON. SRI C. SUBRAMANIAM : The teachers are since reported to have joined duty in the school on 23rd October 1961 forenoon.

Waste Lands Enquiry Committee (Report)

*** 2220 Q.—SRI S. M. ANNAMALAI :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தரிசு நிலங்களை (waste lands) உபயோகப்படுத்துவதைக் குறித்து Sri B N. Uppal கமிட்டியுடன் மாநில சர்க்கார் விவாதித்தார்களா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) The waste-lands Enquiry Committee set up by the Government of India has had discussions with officers of the State Government.

() The Committee has not yet submitted its report and as such details of discussions of this Committee cannot be given at this stage

9th December 1961]

SRI S. M. ANNAMALAI : நம்முடைய மாநிலத்தில் மொத்த முள்ள தரிசு நிலம் எவ்வளவு? அந்தத் தரிசு நிலத்தை எப்படி உபயோகிப்பது என்பதைப் பற்றி சர்க்கார் தனித் திட்டம் தீட்டி யிருக்கிறார்களா? அப்படியானால் அதன் விளக்கம் கொடுக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இருநூற்றைம்பது ஏக்கருக்கு மேற்பட்ட பிளாட் வேஸ்டாக இருந்தால், எந்தெந்த ஜில்லாவிலே எவ்வளவு இருக்கிறது; அதை விவசாயத்திற்குக் கொண்டுவர முடியுமா என்று பரிசீலனை செய்து, அவற்றிற்கு சீக்கிரத்தில் வசதி செய்யப்படும். இருநூற்றைம்பது ஏக்கருக்கு உள்பட்ட இடமாக இருந்தாலும், அது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. எந்தெந்தப் பிராந்தியத்தில் அந்த பிளாட் இருக்கிறது, அதை எப்படி விவசாயத்திற்குக் கொண்டுவருவது, அதை எப்படி ரிக்கிளெய்ம் பண்ணவேண்டும் என்பதை எல்லாம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. மொத்தத்திலே தமிழ் நாட்டிலே அதிகமாக இம்மாதிரி தரிசு நிலம் இருப்பதாகத் தெரியவில்லை.

SRI K. ANBAZHAGAN : இருக்கிற தரிசு நிலங்களை அந்தந்த வட்டாரத்திலுள்ள நிலமில்லாத ஆதித்திராவிட ஏழைமக்களைப் பயிரிடச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைத்தான் அரசாங்கம் செய்து வருகிறது.

SRI A. GOVINDASAMY : இப்பொழுது புறம்போக்கு நிலங் களை நிலமில்லாத ஏழை ஆதித்திராவிட மக்களும், பின்தங்கிய மக்களும் உழுது பயிர்செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் அவைகளை இப்பொழுது பஞ்சாயத்திடம் ஒப்படைக்கிற காரணத் தினாலே, அந்த நிலங்களை பஞ்சாயத்து எடுத்துக்கொள்ள முயற்சி செய்கிறது. அவர்களே அந்த நிலங்களை தொடர்ந்து பயிரிடுவ தற்கு சர்க்கார் அனுமதிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : யார் பயிரிடுவ தானாலும், நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுப்பதுதான் அரசாங் கத்தின் கொள்கை. ஆனால், கணக்கில்லாமல், ஏற்கெனவே 10 அல்லது 15 ஏக்கர் நிலமுள்ளவர்கள், தங்கள் இஷ்டம்போல், தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு, வேறு நிலத்தை ஆக்கிரமித்துக்கொண்டால் அதை சர்க்கார் அனுமதிக்காது. இதற்கெல்லாம் பஞ்சாயத்து சட்டம் தடையாக இருக்காது.

SRI S. SADASIVAM : என்னுடைய பகுதியிலே புல் தரிசு நிலங்களையும் தரிசு நிலங்கள் இனத்திலே கொண்டுவந்து, அவை களையும் இந்த சட்டத்தில் உட்படுத்துவதற்கான காரியங்கள் நடைபெறுகின்றன. இதைத் தடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் தனியாக எழுதி அனுப்பினால் அதைப் பார்த்து நடவடிக்கை எடுக்க முடியும்.

[9th December 1961

SRI T. SAMPATH : இதுவரையிலும் எத்தனை ஏக்கரா தரிசு நிலங்கள் ரிக்கிளெய்ம் செய்யப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றிய தகவல் இப்பொழுது என்னிடமில்லை.

SRI P. G. MANICKAM : விவசாயத்திற்கு லாயக்கான தரிசு நிலங்கள் எங்கெங்கு அதிகமாக இருக்கின்றனவோ, அவைகளை எல்லாம் கூட்டுறவுப் பண்ணைகள் திட்டத்தின் கீழ் அமலுக்குக் கொண்டுவருவதற்கு மேலே குறிப்பிட்ட கமிட்டி பரிசீலனை செய்ததா? அப்படியானால் அவ்வாறு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறிப்பான திட்டம் எதுவுமில்லை. நிலம் பரப்பு எவ்வளவு இருக்கிறது, பயிரிடுவதற்கு லாயக்காக இருக்கிறதா, அந்த வட்டாரத்திலே பயிரிடக்கூடிய வர்கள் கூட்டுறவு சங்கத்தில் சேருவதற்குத் தயாராக இருக்கிறார்களா என்பதைப் பார்த்துத்தான் நடவடிக்கை எடுததுக்கொள்ள முடியும்.

SRI T. S. RAMASWAMI : கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்தவரையில் இப்படி நேரடியாக அவர்களுக்கு அஸைன் பண்ணிக் கொடுப்பதற்கு முடியாமல் இருக்கிறது. குத்தகைப் பாட்டம் எடுத்தால்தான் கொடுக்கமுடியும். ஆகவே போர்டு ஸ்டாண்டிங் ஆர்டரை அங்கு விஸ்தரிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதைப்பற்றி கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

SRI C. NATARAJAN : என்னுடைய வட்டாரத்தில் சின்ன சேலம் பகுதியில் ஆயிரக்கணக்கான தரிசு நிலங்களை ஆட்டுப் பண்ணைக்காக ஒதுக்கி, அரசாங்கம் எதுவும் செய்யாமல் வைத்திருக்கிறார்கள். அதைப் பொது மக்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் ஆடே வேண்டியதில்லை என்று சொன்னால், அந்தப் பண்ணையைக் கலைத்துவிட்டு மேலும் என்ன செய்யலாம் என்பதைப் பற்றிப் பார்க்கலாம்.

SRI V. K. KOTHANDARAMAN : காட்டு இலாகாவிற்கு என்று நிலம் ஒதுக்கப்பட்டு, வருஷா வருஷம் பணம் செலவழித்தும்கூட, மரமே வராத தரிசு பூமி ஏராளமாக இருக்கிறது. அதை விவசாயம் செய்வதற்கு ஒதுக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : காட்டு இலாகாவைப் பொறுத்த வரையில் இப்பொழுது சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு செலவுத்திட்டத்தில் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்

கின்றன. அதைப் பார்த்தால் காட்டு இலாகாவுக்கு அதிகமாக வருமானம் கிடைக்கிறது என்பது தெரியவரும். அதிலே ஒன்றும் பயன்படுத்த முடியாமல் இருக்கும் நிலமாய் இருந்தால் வேறு என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து வருகிறோம்.

DEPUTY SPEAKER : Questions are over.

[Note.—An asterisk (*)at the Commencement of a speech indicates revision by the member.]

II.—POINT OF INFORMATION *re* QUESTIONS.

* SRI K. VINAYAKAM : Sir, I rise on a point of information

Sir, we are sitting for the last time before the General Elections I believe we would not sit again for another session till we get elected and come back again to the House or defeated. I would like to know how many questions have been admitted so far, whether all of them would be placed before the House for any interpellation and how many would lapse. Because I have sent a large number of questions, I am asking this. How many answers have been received from the several Departments, how many would be placed before the House and how many would lapse? May I know this information from the Chair, Sir.? 9-00 a.m.

DEPUTY SPEAKER : The information will be furnished on Monday, as it is not readily available with me now.

* SRI T. S. RAMASWAMI : Generally, 35 to 45 questions are answered during question-hour. Today only 18 questions were allowed. Is it due to dearth of questions from Members or delay in respect of replies from the departments of the Secretariat? Several Members have given notice of several questions. Generally, question hour is for one hour in every Assembly. To-day we have not sat even for one-hour for questions. What exactly is the reason for this?

DEPUTY SPEAKER : Some of the Hon. Ministers had gone on tour. At the same time we have not received replies from the departments of the Secretariat. It has been delayed. That is why many questions have not been included in the list of questions.

SRI T. S. RAMASWAMI : We have hardly eight or ten days more. I think there are still hundreds of questions pending with the departments. In fact, if I remember right, in the Rules Committee's sittings at Ootacamund it was decided that if within a month of sending notice to the department concerned, the reply was not received, it should be included in the list of questions for the day. I want to know whether that understanding arrived at is being kept up?

DEPUTY SPEAKER : The Speaker has got power to extend the time, if necessary. If the department wants time, the Speaker extends the time.

[9th December 1961

Sri T. S. RAMASWAMI : I know that the Speaker has a right to extend the time-limit. But the understanding arrived at in Ootacamund was that if within a month the reply was not received, it should be included in the list of questions for a day. This matter was discussed at Ootacamund and the above was the understanding arrived at. Otherwise it would lead to undue delay.

DEPUTY SPEAKER : I shall read from what happened at the Rules Committee meeting held at Ootacamund.

" Sri T. S. Ramaswami moved that the second proviso of rule 34 be deleted. Explaining the object of his amendment he stated that there was enormous delay in the members' getting replies for important questions. If the proviso was omitted, all questions pending with the departments for more than 14 days would have to be automatically included in the list of questions for a day. The Hon. Sri C. Subramaniam pointed out that there was no delay on the part of the Secretariat Departments. When they had to collect information from the Heads of Departments and other officers in the districts, it took some time. If they agreed to delete the proviso, as suggested by Sri T. S. Ramaswami, it would not improve matters. Because, when they had not received full information from the departments, they would have to send a reply to the Legislature Department to the effect 'The information asked for by the hon. Member is being collected.' If that answer could satisfy the members, he had no objection to accepting the amendment suggested by Sri T. S. Ramaswami. He suggested that the Speaker might extend the time by one week in in the first instance and that if the departments wanted further extension the Speaker might give another weeks' time. The Speaker said that the Hon. Minister's suggestion would be kept in mind. Sri T. S. Ramaswami then did not press his amendment."

Sri T. S. RAMASWAMI : How far has the Hon. Minister's suggestion been kept up, I would like to know.

DEPUTY SPEAKER : As far as possible.

III.—Adjournment Motion *re* Cut in Sugar Production.

DEPUTY SPEAKER : I have received notice of an adjournment motion from the hon. Member Sri A. Govindasamy to discuss a matter of urgent public importance, viz., ten per cent cut in sugar production on account of which sugar producers and sugarcane growers have been affected much.

I would like to inform the hon. Member that a statement was made by the Hon. Minister yesterday and further that the hon. Member has got an opportunity to discuss this matter during the ensuing discussion on the budget. So I do not give my consent to the hon. Member to raise this adjournment motion.

9th December 1961]

SRI T. S. RAMASWAMI : On a point of order, Sir. I am afraid that the consent of the House is necessary to proceed to the next item.

DEPUTY SPEAKER : As soon as the questions are over, we can proceed to the next item.

SRI T. S. RAMASWAMI : Rule 22 of the Assembly Rules states that the first hour of every sitting shall, unless the House unanimously resolves otherwise, be available for the asking and answering of questions. So, the consent of the House is necessary if we want to proceed with any other item within the first one hour allotted for questions.

DEPUTY SPEAKER : Unless we want to take away the question-hour completely and allot it to some other business, permission of the House under Rule 22 is not necessary.

IV.—CALLING ATTENTION TO THE RETRENCHMENT OF WORKERS IN THE MUKKAMPALA ESTATE.

SRI V. K. KOTHANDARAMAN : *கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கன்யாகுமரி ஜில்லாவிலுள்ள முக்கம்பலா எஸ்டேட்டில், இப்பொழுது அதற்குப் பெயர் பெத்தானி எஸ்டேட், வேலை செய்யக்கூடிய சுமார் 126 தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டதுடன் அவர்கள் அவர்களுடைய குடியிருப்பிலிருந்தும் கூட வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அதனால் அந்தத் தொழிலாளர்கள் ரொம்பவும் துன்பத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களையும் இன்னல்களையும் எடுத்துரைப்பது ரொம்பவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கக்கூடிய விஷயமாக இருக்கிறது என்பதை கனம் உள்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mukkampala Estate was owned by the Midland Rubber and Produce Company, Limited, Allepey. One hundred and twenty-six workers were working in the estate. On 29th August 1961, the Superintendent of the Mukkampala Estate gave notice stating that they had decided to retrench the workers with effect from 31st August 1961, after paying the notice-pay, etc., stipulated under the Industrial Disputes Act, as they had decided to sell Mukkampala Estate on and from 1st September 1961. Accordingly, the management paid notice-pay, compensation, etc., to the 126 workers on 31st August 1961 in full and final settlement and terminated their services. From 1st September to 6th September 1961 there

was no work on the estate and so no person was employed on the estate. On 6th September 1961 Mukkampala Estate was sold to the Archbishop of Trivandrum and a clause was added in the sale deed to the effect that the vendor had terminated the services of all the labourers and staff on the estate with effect from 1st September 1961 in accordance with the provisions of the Industrial Disputes Act, after paying the compensation due up to that date and that it will keep the purchaser indemnified against all demands and claims by the said labourers and staff in connection with their services up to 31st August 1961. The new purchaser changed the name of the estate from Mukkampala Estate to Bethany Estate and wanted to do only the work of collecting latex and sending it on to a factory at Kottayam. Therefore, their requirement of labour was only about 40 to start with.

2. On 8th September 1961, about 23 of the old workers and about 20 outsiders were selected for work by the new management. The old workers insisted that all the 126 workers who were previously employed should be taken back into service, which the new management could not do. Therefore the 23 workers staged a demonstration. The management however carried on their work with the help of the newly recruited workers.

3. An industrial dispute was raised on the above issue by the Tamilnad Estate Workers' Union, Kulasekharam, and conciliation was conducted by the Labour Officer, Nagercoil. No settlement was possible during conciliation. The Commissioner of Labour himself therefore met the representatives of the management of Bethany Estate and the Union at Nagercoil on 21st October 1961 for further discussions on the issue in the dispute.

4. Since the previous management had paid off all the statutory dues to the workers in full determination of their claims and have terminated their employment prior to the sale of the estate to the new management and that the workers had accepted the compensation thus offered by the old management, the workers cannot have a right to demand employment from the new management. It is also reported that the immediate requirement of the new management for workers is only for a limited number.

5. For these reasons Government have considered that no reference for adjudication is called for in this case. It is reported that on the advice of the Commissioner of Labour, the new management are willing to recruit the old workers according to their choice, as and when vacancies arise in the estate. The workers have been advised to approach the new management with their applications for employment in the estate and the management also have been advised to recruit those workers found suitable against future vacancies.

V.—PRESENTATION OF THE BUDGET FOR THE YEAR 1962-63.

DEPUTY SPEAKER : The Hon. Sri C. Subramaniam, Minister for Finance will now present the Budget for the year 1962-63.

